**05.08.2025**

**MCOP. No.142/2024**

**ம.சா. 1 – திரு. கனிமொழி.**

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திரு.M.சுந்தர், ஜெராக்ஸ் ஆப்ரேட்டர் அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டுள்ளார்.**

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடங்கப்பட்ட நேரம்: 12.38 பி.ப**

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து எந்த இடத்தில் நடைபெற்றது என்றால் கொண்டமநாயக்கன்பட்டி அருகில் நடந்தது. விபத்து எனக்கு போன் மூலமாக தெரிந்தது. விபத்து சம்பந்தமாக முதல் தகவல் அறிக்கை எனது கணவர்மீதுதான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் என் மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் விபத்திற்கு காரணமான வாகனத்தின் கதவு சரியாக இல்லை என்றும் அதனுடைய டயர் தேய்மானம் அடைந்திருந்தது என்றும் பிரேக் சரிவர பிடிக்காமல் இருந்தது என்று கூறியிருந்தேன் என்றால் சரிதான். மேற்கண்ட குறைபாடுகள் சரிசெய்யப்பட்டுதான் 06.09.2023 அன்று பேருந்தானது பயணிகளை ஏற்றி செல்ல பணிக்கு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்த நேரம் இரவு 11.30 மணி என்பதால் என் கணவர் தூங்கிவிட்டார் என்றால் சரியல்ல. தூங்கியபடி வாகனத்தை ஓட்டிச் சென்று புளியமரத்திற்கு இடையில் அரசு பேருந்து மோதியபொழுது முன்புற கண்ணாடி உடைந்து கண்ணாடி துகள்கள் அவர்மீது பட அவர் விழித்துக்கொண்டு பேருந்திலிருந்து தப்பிக் குதித்தபொழுது அங்கிருந்த குத்துக் கல்லில் மோதி அவர் சம்பவ இடத்தில் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. விபத்தின்போது என் கணவர் மட்டும்தான் இறந்துவிட்டார் என்றும் மற்றப்படி பயணிகள் மற்றும் நடத்துநருக்கு ஒரு சிறு காயங்கள் இல்லை என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. இந்த விபத்திற்கு காரணம் என் கணவருடைய கவனக்குறைவான தூக்கம்தான் காரணம் என்றும் அதனால் இந்த எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில்

கோரியுள்ள இழப்பீடு மிகைப்படியானது என்றும் அது கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 12.48 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N

Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2025.08.05 15:27:51 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 05.08.2025